டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.08.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 040 - Madurai | Online Edition

# தமிழகத்தில் வரும் 9ஆம் தேதி வரை மழைக்கான வாய்ப்பு!

சென்னை, ஆக.3

தமிழகத்தில் வரும் 9ஆம் தேதி வரை ஒரு சில இடங்களில் மிதமான, ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென் கடலோர தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. வட தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக, தமிழகத்தில் இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழையும் பெய்யக்கூடும்.

5ஆம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல் பட்டு, சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களிலும், புதுச்சேரி யிலும் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங் களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

6ஆம் தேதி தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

7ஆம் தேதி திருநெல்வேலி மாவட்ட மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கனமழையும், இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

8, 9 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரீப் பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்திட ஆகஸ்ட் 16 கடைசி நாளாகும்!

இராணிப்பேட்டை, ஆக.3

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில், நடப்பு 2026-27 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் பயிர் காப்பீடு திட்டதில், அறிவிக்கப்பட்ட பிர்கா அளவில் நிலக்கடலை, உளுந்து, பச்சைபயறு, துவரை ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி.திலகவதி தெரிவித்துள்ளார்.



எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள காரீப் பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

காரீப் பருவ நிலக்கடலை, உளுந்து, பச்சைபயறு, துவரை ஆகிய பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் ஆகஸ்ட் 16-ஆம் தேதி கடைசி நாளாகும்.

இத்திட்டத்தில் பயிர் கடன் பெறும் மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு, காரீப் பருவம் நிலக்கடலை பயிருக்கு ரூ. 644/-, உளுந்து, பச்சைபயறு, துவரை ஆகிய பயறு வகை பயிர்களுக்கு ரூ.374/- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, ஷ்) சிட்டா, ஷ்ஷ்) நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், ஷ்ஷ்ஷ்) ஆதார் அட்டை, ஷ்ஸ) வங்கி கணக்கு புத்தகம், ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம்.

2026-ஆம் ஆண்டில் 'சூப்பர் எல் நினோ' நிகழ்வு காரணமாக, செப்டம்பர் வரையிலான மாதங்களில் வெப்பநிலை வழக்கத்தை விட அதிகமாகவும் பருவமழையின் அளவு குறையவும் வாய்ப்புள்ளது என்பதாலும் காரீப் பருவ நிலக்கடலை, உளுந்து, பச்சைபயறு, துவரை ஆகிய பயிர்களை சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும் பயிர் காப்பீடுத்திட்டத்தில் இணைந்து தங்களது காரீப் பருவ பயிரை முன்கூட்டியே பதிவு செய்ய வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டு கொள்கிறார்.

கல்மேல்குப்பம் கிராமத்தில் வயல் ஆய்வின் பொழுது வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி நிலக்கடலை விவசாயிகளை பயிர் காப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். உதவி வேளாண்மை அலுவலர் ஞானசுந்தரி வயல் ஆய்வில் உடன் இருந்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**6. முருங்கைக்கீரை சூப்**



**தேவையான பொருட்கள்**

முருங்கைக்கீரை — 2 கப்

பூண்டு — 4 பல்

மிளகு — 1 டீஸ்பூன்

சீரகம் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு


**செய்முறை**

கீரையை வேக வைத்து அரைத்து மிளகு, சீரகம் சேர்த்து கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நவீன வேளாண்மையில் உணவு மதிப்புக் கூட்டும் இயந்திரம்

உழவர்கள் உணவு மதிப்பு கூட்டி பயன்படுத்த உள்ளவர்களுக்கும், தனிநபர் வருமாத்தை உயர்த்தவும் தாங்கள் எண்ணிய போது உருவானது விக்டர் அக்ரோ சேல்ஸன் திருக்கை கல் எந்திரம், தானியங்கள் மற்றும் மசாலா பொருட்களின் நிறம் தரம் குறையாமல் பாதுகாப்பதுடன் நுகர்வோரின் உடல்நலத்தையும் பேணி பாதுகாத்து வரும் விக்டர் திருக்கை கல் அரவை எந்திரம் சிறு தானிய உமி நீக்கும் எந்திரம் நவீன வெட் கிரைண்டர், நவீன பல்வரைசர், எண்ணெய் பிழியும் எந்திரம், பாரம்பரிய நெல் உரிக்கும் எந்திரம் மற்றும் மாட்டு தீவனம் வெட்டும் இயந்திரம் ஆகியவை 30,000 க்கும் மேல் மேற்பட்ட உழவர்கள் தனிநபர் வருமானம் உயர நாங்கள் உறுதுணையாக இருந்து வருகின்றோம்.

உலகமெங்கும் சிறுதானியத்தை பயன்படுத்த மத்தியஃ மாநில அரசு முயற்சி மேற்கொண்டுள்ள தருணத்தில் எங்களது சிறந்த தயாரிப்புக்கலான சிறுதானிய உமி நீக்கும் எந்திரம அரசுடன் இணைந்து நுகர்வோரின் உடல்நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

கடந்த 40 ஆண்டுகாலமாக உழவர்கள் ஃ தனிநபர்ஃ நுகர்வோரின் தனிப்பட்ட நலனின் அக்கறை கொண்டுள்ள எங்கள் விக்டர் அக்ரோ சேல்ஸ் நிறுவனம் மேலும் புதிய வகை எந்திரங்களை வழங்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம்.

**பராம்பரிய திருகைக்கல் மாவுமில்**

● 2 HP சிங்கிள் பேஸ் மோட்டரில் இயக்கலாம். வீட்டில் 2’X2‘ சிறிய இடத்தில் அமைத்துக்கொள்ளலாம்.

● 2 HP சிங்கிள் பேஸ் மோட்டாரில் இயங்குவதால், தொடர்ந்து எல்லா நேரங்களிலும் கூலிக்கு மாவு அரைத்து கொடுக்கலாம்.

● 2 HP சிங்கிள் பேஸ் முதல் 20 HP திரி பேஸ் வரை இயந்திரம் கிடைக்கும். அரவைப் பகுதி கல்லினால் ஆனது. எனவே மாவு சூடாவதில்லை. மாவின் ருசியும் தன்மையும் நன்றாக இருக்கும். தானியங்களின் ஊட்டச்சத்து பாதுகாக்கப்படுகிறது.

● விக்டர் திருகைக்கல் இயந்திரம் மூலம் ராகி (கேழ்வரகு), கோதுமை சோளம், கம்பு, மஞ்சள், மிளகாய், மல்லி அரிசி, பருப்பு வகைகள் மாவாக அரைக்கவும் அவரை, துவரை உளுந்து போன்றவை உடைக்கவும் செய்யலாம்.

● நாட்டு மருந்து கால்நடைதீவனம் மற்றும் மூலிகைதூள் தயாரிப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த அரவை இயந்திரம்.

● வாடிக்கையாளர் தேவைக்கேற்ப AUTOMATIC (OR) SEMI AUTOMATIC மாவு ஆலையை நிறுவி கொடுக்கிறோம்.

**மினி நிலக்கடலை உரிக்கும் பெட்டி**

● 2 HP சிங்கிள் பேஸ் மோட்டரில் விதைக்கு தேவையான நிலக்கடலையை உத்திரவாதத்துடன் உரித்து கொடுக்கலாம்.

● வாடிக்கையாளர் தேவைக்கேற்ப அனைத்து வகையான கொள்ளளவிலும் வடிவமைத்து தரப்படும்.

● 2 HP சிங்கிள் பேஸ் முதல் 5 HP திரி பேஸ் வரை பெட்டி கிடைக்கும்.

**ஆயில் எக்ஸ்பெல்லர் (Oil Expeller)**

● தேங்காய் கடலை எள் மற்றும் ஆமணக்கு போன்றவற்றை எண்ணெய் பிழியும் இயந்திரம் எளிமையான மெக்கானிசம் கொண்டது.

● 5X5' சிறிய இடத்தில் அமைத்துக் கொள்ளலாம். இந்த இயந்திரத்தில் புண்ணாக்கு எளிதாக வெளியேறிவிடும்.

● குறைந்த பட்சம் 5 கிலோ கடலை பருப்பில் எண்ணெய் பிழியலாம்.

● ரோட்டரியை விட 5% கூடுதலாக எண்ணெய் கிடைக்கும்.

**சிறுதானியங்கள் உமி நீக்கும் இயந்திரம்**

● சாமை, வரகு, திணை, குதிரை வாலி, பனிவரகு போன்ற சிறுதானியங்கள் உமி நீக்கும் இயந்திரம்.

● 2 HP சிங்கிள் பேஸ் மற்றும் 5 HP திரி பேஸ் மோட்டாரில் இயங்கும் இயந்திரம் உள்ளது.

● குறைந்த இட வசதி போதுமானது மிகவும் எளிமையான மெக்கானிசம் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

● பராமரிப்பு செலவு மிகவும் குறைவு.

**சிறு தானியங்கள் தரம் பிரிக்கும் இயந்திரம் (Grader)**

● 1.5 HP சிங்கிள் பேஸ் மோட்டரில் இயங்கும்

● தானியங்களை தரம் பிரிக்க மூன்று வகை சல்லடையில் வடிவமைக்கப்பட்டது.

**நவீன வெட்கிரைண்டர்**

● நவீன வெட்கிரைண்டர் மூலம் இட்லி, தோசைக்கு மாவு நிமிடத்தில் அரைத்துக் கொடுக்கலாம். மேலும் சட்னி மசாலா இஞ்சி மற்றும் பூண்டு மற்றும் வடைப்பருப்பும் அரைத்துக் கொடுக்கலாம்.

● ஹோட்டல் திருமண மண்டபம் கேன்டீன் மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு மிகவும் ஏற்ற சிறந்த அரவை இயந்திரம்.

● இந்த இயந்திரம் சிங்கிள் பேஸ் 1.5 HP முதல் 3 HP வரை மணிக்கு 30 Kg, 50 Kg, 80 Kg அரவை திறன் கொண்டது. தொடர்புக்கு : 94437 71258.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

# வேளாண்மை வெல்வோம் நிகழ்ச்சி நடந்தது

பிரபல நாளிதழ் சார்பில் 1.8.26 அன்று வேளாண்மை வெல்வோம் என்ற நிகழ்ச்சி திண்டுக்கல் மாவட்டம், தாடிகொம்பு ரோடு PNK மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் முனைவர் சோமசுந்தரம், மக்காசோளம் பற்றிய சிறப்புரை ஆற்றினார். மக்காசோளத்திலிருந்து மதிப்பூட்டிய பொருள்கள் பற்றி முனைவர். ரவி கேசவன் பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் கோவிந்தராஜ் வாழ்த்தி பேசினார்.



கேள்வி பதில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. விழாவில் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# உரக்குழி அமைக்கும் முறை செயல்விளக்கப் பயிற்சி

ஈரோடு, ஆக.3

வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் லேகாஸ்ரீ, ஆனந்தி, திரு ஷரத்தா, நீ ஷ பார்ஜோ, கவி வர்ஷினி, நதியா ஆகியோர் உரக்குழி அமைக்கும் முறை குறித்து செயல்விளக்கப் பயிற்சியை கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தில்



வேளாண் மாணவர்கள் ஈரோடு தட்சங்கரை கிராமத்தில் விவசாயிகளுக்கு உரக்குழி அமைத்து இயற்கை உரம் தயாரிக்கும் முறை குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர்.



இப்பயிற்சியில் பண்ணைக் கழிவுகள், உதிர்ந்த இலைகள், களைகள், சமையலறை கரிமக் கழிவுகள் மற்றும் கால்நடை சாணம் போன்றவற்றைப் பயன்படுத்தி உரக்குழி அமைக்கும் முறையை மாணவர்கள் நேரடியாக செய்து காண்பித்தனர். மேலும், கரிமக் கழிவுகளை அடுக்குகளாக மைத்தல், போதுமான ஈரப்பதத்தை பராமரித்தல், அவ்வப்போது கிளறிவிடுதல் மற்றும் முழுமையாக மக்கிய பிறகு தரமான இயற்கை உரமாக மாற்றும் செயல்முறையையும் விளக்கினர்.

உரக்குழி மூலம் தயாரிக்கப்படும் இயற்கை உரம் மண்ணின் கரிமச்சத்தை அதிகரிக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உதவுகிறது என்பதை மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும், தயாரிக்கப்பட்ட உரத்தை வயல்களில் சரியான அளவில் பயன்படுத்தும் முறை, உரமிட்ட பின் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை வேளாண்மையில் உரக்குழியின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் செயல்விளக்கத்தை ஆர்வத்துடன் கவனித்து, தங்கள் பண்ணைகளிலும் உரக்குழி அமைத்து இயற்கை உரம் தயாரிக்க முன்வருவதாக தெரிவித்தனர்.

# ஊருடையாபட்டியில் ஆத்மா விவசாயிகள் பயிற்சி



திருச்சி, ஆக.3

திருச்சி மாவட்டம், தாத்தையங்கார் பேட்டை வட்டாரம், ஊருடையாபட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்து பயிர்களில் தன்னிறைவு அடைதல் என்ற தலைப்பில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியை துவக்கி வைத்து தலைமை உரை ஆற்றிய வேளாண்மை உதவி இயக்குனர் சுரேஷ்குமார், எண்ணெய் வித்து பயிர்களில் சாகுபடி குறைந்ததினால் பிற நாடுகளிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் நிலையில், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் நிலக்கடலை, ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற பயிர்களில் உற்பத்தி பெருக்கத்திற்கான தேவைகள் குறித்து எடுத்துரைத்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளை ஆத்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரகுண பாண்டியன் வரவேற்று பேசினார்.

விவசாயிகளுக்கு பயிற்சி அளித்த சிறுகமனி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் புனிதவதி, எண்ணெய்வித்து பயிர்களில் விதை நேர்த்தி முதல் அறுவடை உள்ள தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சி முகாமில் ஊருடையா பட்டி கிராமத்தை சேர்ந்த சூரியகாந்தி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பெருந் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரசாத் மற்றும் மணி செய்திருந்தனர்.

## Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஆடிப்பெருக்கும் வேளாண்மையும் - ஒரு பார்வை



ஆடிப்பெருக்கு என்பது ஆடி மாதத்தின் 18 ஆம் நாளை குறிப்பதாகும். இது தமிழர்களின் குறிப்பாக விவசாயிகளின் வாழ்வில் உழவு பணியையும், நீர் வளத்தையும் கொண்டாடும் முக்கிய நிகழ்வாகும். இந்த காலகட்டத்தில் தான் தென்மேற்கு பருவ மழையால் ஆறுகளில் புது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது வாடிக்கையான நிகழ்வு (இந்த ஆண்டு மாறாக வறண்டு உள்ளது). காவிரியில் தண்ணீர் திறந்தும் நேற்று வரை தமிழகத்திற்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**நதிக்கரை வழிபாடு**

இயற்கையான பஞ்ச பூதங்களை தான் மனிதர்கள் வணங்கி வந்தனர். தொன்று தொட்டு நிகழும் இந்த நிகழ்வு தொடர்கிறது. இன்று நதிக்கரையில் புது வெள்ளத்தை மலர்தூவி வரவேற்று இயற்கைக்கு நன்றி செலுத்தும் நாளாக மக்கள், புது மண தம்பதிகளுடன் ஆற்றாங்கரையில் வழிபாடு செய்வது வழக்கம்.

**ஆடிப்பட்டம் தேடி விதை?**

இந்த பழமொழிக்கேற்ப இந்த நன்னாளில் உழவு பணி மேற்கொண்டு விதைப்பு, நாற்று நடுதல் போன்ற நிகழ்வுகள் டெல்டா மாவட்டங்களில் நடைபெறும்.

அதுமட்டுமல்ல அனைத்து கிராமங்களில் உள்ள மக்கள் தங்களுடைய வீடுகளின் கொல்லைபுறங்களில் ‘பயிர்குழி‘ என்ற காய்கறி தோட்டம் அமைத்து அதில் பந்தலில் படரும் புடல், பாகல், அவரை, பூசணி போன்ற காய்கறி விதைகளை ஊன்றுவார்கள். அவரவர் தேவைக்கேற்ப பயிர் குழிகளின் எண்ணிக்கையை கூட்டியோ குறைத்தோ அமைப்பார்கள். தற்போது இந்த கால கட்டத்தில் மாடி தோட்டமாக நகர்ப் புறங்களில் மாறிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடிப்பெருக்கு திருவிழா தமிழகத்திற்கு மட்டும் உரியதல்ல. எங்கெங்கு நதிகள் பாய்கிறதோ அங்கெல்லாம் (காவிரி, கங்கை, கோதாவரி வைகை) உள்ளிட்ட புனித நதிக்கரை ஓரங்களில் இன்று சிறப்பாக நதியை அம்மனாக பாவித்து வழிபாடு செய்வார்கள், இது ஆன்மீக நிகழ்வாக இருந்தாலும் கூட வேளாண்மைக்கு புது ரத்தம் பாய்ச்சும் நாளாக அமைந்துள்ளது. ஆடியிலே விதைத்தால் தையில் அறுவடை என்பது காலகாலமாக நடந்த நிகழ்வு. அதையே தான் இன்றும் விவசாயிகள் தங்களுடைய வாழ்வில் கடைபிடிக்க விரும்பு கின்றனர் என்பதில் எந்தவித மான ஐயமில்லை. இன்றைய தினத்தில் காவிரியின் கதையை படிப்பதும் கேட்பதும் புண்ணியம் என்று நம்முடைய முன்னோர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஆண்டு பொய்த்தாலும் கூட அடுத்த ஆண்டு செழிப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில் நேற்றே ஆடிப் பெருக்கை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர். இது ஆன்மீக நிகழ்வு மட்டுமல்ல. இயற்கை வளங்களுக்கு நன்றி கடன் செலுத்தும் நிகழ்வாக இந்த நாள் உள்ளது.

ஆடி பதினெட்டை ஆடிபாடி வரவேற்போம், உழவர்கள் வாழ்வு செழிக்க!.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# VIT வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு விதைபரிசோதனை நிலையத்தில் தொழில்நுட்ப பயிற்சி

வேலூர், ஆக.3

திருவண்ணாமலை மாவட்டம், கோட்டம்பாளையம் ரோட்டில் உள்ள விதை பரிசோதனை நிலையத்திற்கு வேலூரில் உள்ள VIT வேளாண் கல்லூரில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் தொழில்நுட்ப பயிற்சிக்காக வருகை புரிந்திருந்தார்கள். விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த செயல்முறை பயிற்சி மற்றும் விதைப்பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டது.



இதில் 70 மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டார்கள்.

இப்பயிற்சியின் போது இவ்வாய் வகத்தில் பெறப்படும் மூன்று வகை விதை மாதிரிகள் 1.சான்று விதை மாதிரி 2.ஆய்வாளர் விதை மாதிரி 3. பணி விதை மாதிரி பற்றியும் இவைகள் யாரிடமிருந்து பெறப்படுகிறது என்பது பற்றியும், விதை மாதிரிகள் பதிவு செய்தல், தொழில்நுட்ப பதிவேடுகள் பராமரித்தல், புறத்தூய்மை பரிசோதனை, பிறரக கலவன் கண்டறிதல், ஈரப்பத பரிசோதனை, முளைப்பு திறன் காணக்கீட்டில் இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடின விதை, உயிரற்ற விதை பற்றியும் விரிவாக விளக்கம் அறிக்கப்பட்டது. எந்ததெந்த விதைமாதிரிகளுக்கு எந்த மாதிரி யான விதைப்பு ஊடகம் (Sowing Media) பயன்படுத்த வேண்டும் என்பதை பற்றியும், ஆய்வகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. முளைப்பு திறன் அறையில் விதைகளின் முறைப்புதிறனை சரியாக கண்டறிய எவ்வளவு வெப்பநிலை, ஒளி இருக்க வேண்டும், என்பதை பற்றியும் விளக்கமாக கூறப்பட்டது.

பயிற்சியில் தரமான விதைகள் உற்பத்தி செய்ய விதை பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் அதிக விளைச்சலுக்கு விதை பரிசோதனை எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு பயனளிக்கிறது என்பது பற்றி விளக்கம் அளிக்கப்பட்து. மேற்படி பயிற்சியினை திருவண்ணாமலை விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.பத்மா வழங்கினார்.

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# வாழை சாகுபடிக்கு உகந்த இயந்திரங்களின் தொகுப்பு



வாழை மரம் பூலோகத்தின் கல்பதரு (அனைத்து ரக வாழைமரம்) என போற்றப்படுகிறது. இந்த வாழை மரத்தின் ஒவ்வொறு பாகங்களும் பல வழிகளில் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாழை மரம் நம் அன்றாட தேவையை பூர்த்தி செய்யும் விதமாக பழம், மலர், இலைமற்றும் இதன் நார் தொழில் துறையிலும் பயன்படுகிறது.

வாழை சாகுபடியில் விதைக்கட்டைகள் மிகபெரும் பங்கு வகிக்கிறது. கட்டைகளின் வயது, அளவு மற்றும் எடையை பொருத்து வாழை மகசூல் மாறுபடுகிறது. வாழைக் கட்டையானது ஆரோக் கியமாகவும், நோய் தொற்று இல்லாததாகவும், பூச்சி தாக்குதல் இல்லாததாகவும் இருக்கும் பட்சத்தில் வாழை மகசூல் அதிகரிக்கும் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன.



வழக்கமாக வாழைக் கட்டைகளை நடவு செய்வதற்கு முன் தேவையில்லாத வேர் பகுதி மற்றும் நோய் பாதித்த பகுதிகளை செதுக்கி நடவுக்கு பயன்படுத்த வேண்டும். தற்போது வாழை கட்டையை செதுக்கும் பணியானது கூலிய-ாட்களை கொண்டு செய்யப்படுகிறது. இது மிகவும் சிரமமான மற்றும் அதிக நேரம் எடுத்து கொள்ளும் பணி ஆகும். வாழைத் தண்டில் ஏற்படும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மோனோக்ரோடோபாஸ் எனும் திரவ மருந்து ஒரு மரத்திற்கு 4 மி.லி. வீதம் 45 செ.மீ மற்றும் 150 செ.மீ. உயரங்களில் மாதம் ஒரு முறை 5 முதல் 8 மாதம் வரை உட்செலுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இந்த பணியானது தற்பொழுது ஊசி அல்லது திருப்புளி கொண்டு சிறு தூவரம் இட்டு செலுத்தப்படுகிறது. இம்முறையில் அதிக பூச்சி மருந்து கரைசல் வீணாவதுடன் நேரம் விரையமாகிறது. வாழைக்குலை அறுவடை செய்யும் தருணத்தில் வாழைக்குலை அறுவடை செய்ய இரண்டு கூலியாட்கள் தேவைப்படுகிறது.






ஒருவர் மரத்தை பாதியில் வெட்டுவதற்கும் மற்றொருவர் குலையை தாங்கி பிடித்து அறுவடை செய்ய வேண்டி இருக்கிறது. இது மிகவும் கஷ்டமான மற்றும் சிரமமான பணி ஆகும். மேற்சொன்ன மூன்று பணி களையும் கூலி ஆட்களை கொண்டு செய்யும் போது அதிக நேரமாவதுடன் உடற்சோர்வு மற்றும் இதரபிற பாதிப்புகளும் கூலியாட்களுக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதை கருத்தில் கொண்டு கோவையில் உள்ள மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்தின் மண்டல மையமும், திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையமும் இணைந்து நடவு வாழைக் கட்டையை சீவும் கருவியையும், பூச்சிக்கொல்லி மருந்தை வாழை மரத்தில் உட்செலுத்தும் கருவியையும் மற்றும் டிராக்டரால் இயங்கும் வாழைக்குலை அறுவடை செய்யும் கருவியையும் உருவாக்கி உள்ளனர்.



## நடவு வாழைக்கட்டை சீவும் இயந்திரம்

### சுழலும் ஒற்றை சிரவு கத்தி அமைப்பு

இந்த இயந்திரத்தில் செங்குத்து அச்சில் சுழலக்கூடிய ஒற்றை சிரவு கத்தி பொருத்தப்பட்டுள்ளது. இந்த சிரவு கத்தியை இயக்க ஒரு குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டர் போதுமானது.சீவ வேண்டிய வாழைக் கட்டையை சுழலும் கத்திக்கு (300 மி.மீ) எதிராக பிடித்துக் கொண்டு நடவுக்கு தேவையான அளவு மற்றும் ஆழத்திற்கு ஏற்ப வாழைக் கட்டையை சீவி கொள்ளலாம். இந்த இயந்திரத்தின் இயக்க வேகத்தை வேக கட்டுப்பாடு மாட்டர் மூலம் மாற்றிக் கொள்ளலாம். கத்தியானது எந்த திசையிலும் சுழலக்கூடியது. பொதுவாக சிரவு கத்தியை சுத்தம் செய்ய, கத்தியை எதிர் திசையில் சுழற்றி சிரவு பகுதி சுத்தம் செய்துக் கொள்ளலாம். இந்த இயந்திரத்தின் ஓட்டு மொத்த அளவு 750 மி.மீ. X 500 மி.மீ. X 850 மி.மீ ஆகும். வாழைக் கட்டையை சரியான பகுதியில் சிரவு செய்ய உகந்ததாக உள்ளதால் கிடைக்ககூடிய நடவு வாழைக்கட்டை தரம் உடையதாக இருப்பதால் இந்த இயந்திரத்தை எளிதாக கையாளலாம். இந்த இயந்திரத்தை கொண்டு ஒரு மணி நேரத்தில் 90-100 கட்டைகளை சீவ முடியும். இதன் வேலைதிறன் 70 சதவீதம் ஆகும்.

### சுழலும் இரட்டை சிரவு கத்தி அமைப்பு

இந்த இயந்திரத்தில் செங்குத்து அச்சில் சூழலக்கூடிய இரட்டை சிரவு கத்தி பொருத்தப்பட்டுள்ளது. இந்த சிரவு கத்தியை இயக்க ஒரு குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டர் போதுமானது.

சீவ வேண்டிய வாழைக்கட்டையை சுழலும் கத்திக்கு (300 மி.மீ) எதிராக பிடித்துக் கொண்டு நடவுக்கு தேவையான அளவு மற்றும் ஆழத்திற்கு ஏற்ப வாழைக்கட்டையை சீவி கொள்ளலாம். கத்தியின் சுழலும் வேகமானது ஒரு வினாடிக்கு 2400 சுற்றுகள். இந்த இயந்திரத்தை கொண்டு ஒரு மணி நேரத்தில் 200-500 கட்டைகளை சீவ முடியும். இதன் ஒட்டு மொத்த அளவு 1750 மி.மீ. X 1150 மி.மீ. X 650 மி.மீ ஆகும்.



### செங்குத்து கத்தி அமைப்பு

இந்த இயந்திரத்தில் வாழைக் கட்டையை பிடிக்கும் அமைப்பு உள்ளதால் கட்டையை பிடிக்கும் இடத்தில் வைத்து சீவி கொள்ள லாம். இந்த இயந்திரத்தின் மேற்பகுதியில் உள்ள ஸ்பிரிங்க் சுமையுடன் கூடிய பிடிக்கும் அமைப்பானது வாழைக்கட்டையை தேவையான நிலையில் நிறுத்தி சீவி கொள்ளலாம். பிடிக்கும் அமைப்பை தேவையான வேகத்தில் இயக்க ஒரு குதிரைத் திறன் கொண்ட மின்மோட்டர் போதுமானது. சீவும் கத்தியை தேவையான இடத்தில் வைப்பதன் மூலம் சுழலும் பிடிப்பானின் மீது பொருத்தப் பட்டுள்ள வாழைக்கட்டையை தேவையான உருவத்திற்கு கொண்டு வருவதான் மூலம் ஒரே மாதிரியான வாழைக்கட்டை நடவுக்கு கிடைக்கிறது. வாழைக் கட்டையை சீவ பிடிப்பானின் மீது பொருத்து வதற்கு முன்பு அடி வேரை வெட்டி எடுப்பதற்கு கூடுதலாக கத்தி ஒன்றும் இந்த இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரமானது பெரிய அளவிலான வாழைக்கட்டைக்கு உகந்தது. இந்த இயந்திரத்தின் மூலம் கொண்டு ஒரு மணி நேரத்தில் சுமார் 120-150 வாழைக்கட்டைகளை சீவ முடியும். இதன் ஒட்டு மொத்த அளவு 1145மி .மீ. X 515 மி.மீ. X 1825 மி.மீ ஆகும்.

### வாழை மரத்திற்கு மருந்து உட்செலுத்தும் கருவி

இக்கருவியானது மருந்துகலன், பம்பு, மருந்து அளவை கட்டுப்படுத்தும் அமைப்பு மற்றும் மருந்து உட்செலுத்தும் ஊசி ஆகிய பாகங்களை கொண்டுள்ளது. இந்த மருந்து உட்செலுத்தும் ஊசியானது 7.5 செ.மீ. நீளமும், 2 மி.மீ. கூர்மையான முனையுடன் கூடிய எக்கு 304 தர உலோகத்தால் செய்யப்பட்டது. பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட மருந்து கலனின் கொள்ளளவு 8 முதல் 16 லிட்டர் ஆகும்.





பெரிஸ்டால்டிக் பம்பை பயன்படுத்தி மருந்து கலனில் இருந்து மருந்தை உட்செலுத்தும் ஊசிக்கு தேவையான அளவு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த லாம். இந்த கட்டுப்படுத்தும் அமைப்பானது எலக்ரானிக் அமைப்புடன் இணைத்து மருந்து அளவை கட்டுப்படுத்துகிறது. மருந்தை மரத்திற்கு உட்செலுத்திய தற்கு பிறகு மருந்து திரும்ப ஊசிக்கு வருவதை கட்டுப்படுத்த, கட்டுப்படுத்தும் அமைப்பில் ஒரு முனை குழாய் (வால்வு) பொருத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு மணி நேரத்தில் 140 முதல் 150 மரத்திற்கு மருந்தை உட்செலுத்த முடியும். ஒரு மரத்திற்கு மருந்து செலுத்தும் அளவு 2 முதல் 4 மி.லி. ஆகும். இதன் கசிவு சதவீதம் 2 சதவீதத்தைவிட குறைவு ஆகும்.

**மினி டிராக்டரால் இயங்கும் வாழைக்குலை அறுவடை இயந்திரம்**

இந்த இயந்திரமானது முதன்மை சட்டம், அறுவடைசட்டம், குலைதாங்கும் அமைப்பு, குலைவெட்டும் கத்தி அமைப்பு, ஹைட்ராலிக் அமைப்பு மற்றும் சக்தி (ஆற்றல்) பரிமாற்றும் அமைப்பு ஆகிய பாகங்களை கொண்டுள்ளது. இந்த முதன்மை சட்டமானது மினி டிராக்டரின் முன் புறத்தின் அடிசட்டத்தில் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குலை அறுவடை செய்யும் சட்டமானது, முதன்மை சட்டம் மற்றும் ஹைட்ராலிக் சிலிண்டருடன் இணைக்கப்பட்டு அறுவடை செய்யும் சட்டத்தை மேலும் மற்றும் கீழும் தூக்கி இறக்க பயன்படுகிறது. இந்த ஹைட்ராலிக் சிலிண்டரானது அறுவடை சட்டம், குலையை தாங்கி பிடிக்கும் அமைப்பு மற்றும் குலையை வெட்டும் அமைப்பை இயக்க வடிவமைக்கப்பட்டது.

இந்த மேம்படுத்தப்பட்ட வாழை குலை அறுவடை இயந்திரத்தை கொண்டு வாழைமரத்தில் இழுந்து குலையை வெட்ட முடியும். இந்த இயந்திரமானது 1.1 முதல் 2.7 மீ. உயரம் வரை உயர்த்த முடியும். இந்த இயந்திரத்தை கொண்டு 18 முதல் 25 கிலோ வரை எடை உள்ள வாழை குலையை கையாள முடியும். இந்த அறுவடை இயந்திரமானது ஒரு மணி நேரத்தில் 25 முதல் 32 வாழை குலைகளை வெட்டும் திறன் கொண்டது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

## வாழை மரத்தின் வெளிப்புற மட்டையில் இருந்து தட்டு தயாரிக்கும் இயந்திரம்

வாழைத்தார் அறுவடைக்கு பிறகு வாழை மரமானது தேவை இல்லாத கழிவு பொருளாக கருதப்படுகிறது. மொத்தமுள்ள 14-18 அடுக்குகளில் வெளிப்புறம் உள்ள 6-8 அடுக்குகளை பயன்படுத்தி தட்டு உருவாக்க இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. இந்த இயந்திரத்தின் மூலம் உருவாக்கப்படும் வாழை தட்டானது மலிவானதாகவும், சுகாதரமானதாகவும் மற்றும் மக்கும் தன்மையும் கொண்டுள்ளது. இந்த இயந்திரத்தின் முதன்மை அமைப்பானது வாழை மட்டையை பிடிக்கும் அலுமினியத்தில் ஆன ஆண் மற்றும் பெண் அச்சு அமைப்பின் விட்டமானது 200 மி.மீ X 250 மி.மீ X 300 மி.மீ ஆகும். இந்த இயந்திரத்தில் தட்டின் அளவிற்கு ஏற்ப அச்சின் வெப்பநிலை மற்றும் அழுத்தத்தை மாற்றிகொள்ளும் வசதி உள்ளது.



உலர்ந்த வாழை மட்டையை இணைத்து தேவையான அளவிற்கு ஏற்ப தட்டு தயாரிக்கும் செயல்முறை விளக்க நெறிமுறை தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு மணி நேரத்தில் 25-30 தட்டுகளை தயாரிக்கலாம். இதன் ஒட்டு மொத்த அளவு 610 மி.மீ X 470 மி.மீ X 1700 மி.மீ ஆகும். இந்த இயந்திரத்தை கொண்டு வெவ்வேறு சதுர அளவிலான அச்சுகளை பயன்படுத்தி சதுர வடிவிலான தட்டுகளையும் தயாரிக்க முடியும். இந்த புதிய அணுகுமுறையின் மூலம் வாழை கழிவிலிருந்து வருமானம் மற்றும் இதன் மூலம் வாழை சாகுபடி செய்யும் பகுதியில் தொழில் முனைவோரை மேம்படுத்த முடியும்.

தகவல் : *முனைவர்கள் த.செந்தில்குமார், ரவீந்திர நாயக், கோ. மணிகண்டன், முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் முதுநிலை ஆராய்ச்சியாளர், மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம், மண்டல நிலையம், கோயமுத்தூர் - 641 007.*



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல் சாகுபடியில் இலைச் சுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, ஆக.3

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் தட்பவெப்பநிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் ஆங்காங்கே தென்படுவதால், இதனை விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தர மகாலிங்கம், ஆலோசனை தெரிவித்துள்ளார்.

**தண்டு துளைப்பான்**

குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம்பயிரில் நடுக்குருத்து வாடிக் காய்ந்துவிடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்படின் நெல்மணிகள் பால் பிடிக்காமல், வெண்கதிர்களாக மாறி மகசூல் பாதிப்படைகிறது. இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்திட நாற்றுகளை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து தேவையான தழைச்சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இடுதல் வேண்டும்.

முதிர்ந்த நாற்றுகளை நடும்போது நுனியைக் கிள்ளிவிட்டு நடுவதனால் குருத்துப்பூச்சியின் முட்டைக் குவியல்களை அழித்து விடலாம். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை ஒளிரவிட்டுக் குருத்துப் பூச்சியின் தாய் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம்.



**இலைச்சுருட்டுப் புழு**

இலைச்சுருட்டுப் புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்துக் கொண்டு அவற்றிலுள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாக காணப் படும். இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகமாக பயன்படுத்திய பகுதிகளிலும் மிகுந்து காணப்படும். எனவே வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலமாகவும் பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்திற்கு அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறை

பிரித்து இடுவதன் மூலமாகவும் இதன் தாக்குதலை கட்டுப் படுத்தலாம். மேலும் பறவை இருக்கைகளை வைத்து பறவை களை கவர்ந்து புழுக்களை அழிக்கலாம்.

நெற்பயிரில் தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு புளூபெண்டியமைடு 20 WG என்ற மருந்து 50 கிராம் (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரடு 50 எஸ்.பி என்ற மருந்து 400 கிராம் (அல்லது) குளோரான்ட் ரனிலிபுரோல் 18.5 எஸ்.சி என்ற மருந்து 60 மிலி இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.



# காவேரி கூக்குரல் மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டத்தில் 1,500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்பு!



விழுப்புரம், ஆக.3

விழுப்புரம் ஜெயசக்தி திருமண மண்டப வளாகத்தில் காவேரி கூக்குரல் இயக்கத்தின் மூலம் மரம் சார்ந்த விவசாயம் குறித்த மாதந்திர கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்,

மரம் சார்ந்த விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்களைக் கற்றுத்தரும் வகையில், மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டங்களை 'காவேரி கூக்குரல்' இயக்கம் நடத்தி வருகிறது.

கடந்த ஜுலை 26ல் கோயம்புத்தூர், நாமக்கல், செங்கல்பட்டு, திண்டுக்கல், விழுப்புரம், ஈரோடு, தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, சேலம், வேலூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, தென்காசி, தஞ்சாவூர், கடலூர் உட்படப் பல மாவட்டங்களில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்களில் 1,500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

மரம் சார்ந்த விவசாயத்தை லாபகரமாகச் செய்யும் உத்திகளைக் காவேரி கூக்குரல் களப்பணியாளர்கள் விவசாயிகளுக்கு விளக்கினார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மரக்கன்றுகளை கையாளும் முறை, மண்ணுக்கேற்ற மரங்களைத் தேர்வு செய்தல், நடவுக்கு முந்தைய நிலத் தயாரிப்பு மற்றும் மரக்கன்று நடும் வழிமுறைகள் போன்ற பல்வேறு விசயங்கள் விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.


மேலும், கன்று நட்ட பின் அதன் திடமான வளர்ச்சிக்குத் தேவையான பராமரிப்புகள், சரியான முறையில் கவாத்து (Pruning) செய்யும் முறை, சந்தன மரத்துடன் துணைப்பயிர் நடுவதன் முக்கியத்துவம் மற்றும் கோடைக் காலத்தில் நீர் மேலாண்மை குறித்தும் விளக்கப்பட்டது. மர அறுவடை வரை விவசாயிகள் தொடர்ந்து வருமானம் பெறுவதற்கு ஊடுபயிர் சாகுபடி அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், மர விவசாயத்தில் மிளகு சாகுபடி மூலம் கிடைக்கும் வருமானம் குறித்தும் விவசாயிகள் தெரிந்து கொண்டனர்.

நிகழ்ச்சி குறித்து விவசாயிகள் கூறுகையில், ‘இத்தகைய மாதாந்திர நிகழ்வுகள் எங்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளன. இதன் மூலம் நாங்கள் பல்வேறு தொழில் நுட்பங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது. புதிய விவசாயிகள் பலரும் மரம் நட ஊக்கம் தருவதாக உள்ளது,

நாங்களும் புதிய விவசாயிகளை மர விவசாயத்தில் ஈடுபடுத்துவதற்கு கருத்தரங்கு பயனுள்ளதாக உள்ளது என்று ஆர்வத்தை பகிர்ந்து கொண்டனர். மேலும், காவேரி கூக்குரல் இயக்கம் டிம்பர் மரக்கன்றுகள் வழங்குவது போலப் பழமரக்கன்றுகளையும் வழங்க வேண்டும்‘ என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இத்தகைய மாதாந்திரக் கூட்டங்கள் வரும் மாதங்களிலும் தொடர்ந்து நடைபெறும் என்பதால், பெரும்பாலான விவசாயிகள் இதில் பங்கேற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். விவசாயிகளுக்கு ஈஷா நாற்றுப் பண்ணைகளில் டிம்பர் மரக்கன்றுகள் ரூ.5 என்ற குறைந்த விலையில் வழங்கப் படுகின்றன. மேலும், விவசாயிகளின் நிலத்திற்கே நேரடியாகச் சென்று மண்ணுக்கேற்ற மரங்களைத் தேர்ந்தெடுக்க இலவச ஆலோசனைகளையும் காவேரி கூக்குரல் பணியாளர்கள் வழங்கி வருகிறார்கள்.

மரக்கன்று களைப் பெறவும் ஆலோசனைகளுக்கும் 80009 80009 என்ற காவேரி கூக்குரல் உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நீர்ப்பாசன நீரின் தரம் மற்றும் அதை மேம்படுத்தும் மேலாண்மை முறைகள்



## நீரே விவசாயத்தின் உயிர்நாடி

வேளாண்மையின் வெற்றி பெரும்பாலும் நீர்ப்பாசனத்தைச் சார்ந்துள்ளது. பயிர்களுக்கு தேவையான அளவு நீர் கிடைப்பது மட்டுமல்லாமல், அந்த நீரின் தரமும் மிகவும் முக்கியமானதாகும். தரமற்ற நீரை நீண்டகாலம் பயன்படுத்துவதால் மண்ணின் வளம் குறைதல், உப்புத்தன்மை அதிகரித்தல், பயிர் வளர்ச்சி பாதிப்பு, மகசூல் குறைதல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, நீரின் தரத்தை அறிந்து அதற்கேற்ப மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது காலத்தின் தேவையாகும்.

## நீர்ப்பாசன நீரின் தரம் என்றால் என்ன?

நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் நீரில் கரைந்துள்ள உப்புகள், சோடியம், கால்சியம், மக்னீசியம், குளோரைடு, போரான் போன்ற தாதுக்களின் அளவு மற்றும் நீரின் அமில–காரத் தன்மை (pH), மின் கடத்துத் திறன் (EC) ஆகியவற்றின் அடிப்படையில் நீரின் தரம் மதிப்பிடப்படுகிறது. நல்ல தரமான நீர் பயிர்களுக்கு தேவையான ஈரப்பதத்தை வழங்குவதோடு, மண்ணின் வளத்தையும் பாதுகாக்கிறது. தரமற்ற நீர் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளை மாற்றி, பயிர்களின் வளர்ச்சியைத் தடுக்கும்.

## நீர்ப்பாசன நீரின் தரத்தை மதிப்பிடும் முக்கிய அளவுகோல்கள்

### 1. மின் கடத்துத் திறன் (Electrical Conductivity - EC)

EC என்பது நீரில் கரைந்துள்ள மொத்த உப்புகளின் அளவைக் காட்டும். EC அதிகமாக இருந்தால் உப்புத்தன்மையும் அதிகமாக இருக்கும்.

- EC குறைவாக இருந்தால் பெரும்பாலான பயிர்களுக்கு ஏற்றது.
- EC அதிகரிக்கும்போது பயிர்கள் நீரை உறிஞ்சும் திறன் குறைகிறது.
- அதிக உப்புத்தன்மை விதை முளைப்பதையும் தாவர வளர்ச்சியையும் பாதிக்கிறது.



**2. சோடியம் உறிஞ்சும் விகிதம் (Sodium Adsorption Ratio - SAR)**

நீரில் சோடியம் அளவு அதிகமாக இருந்தால் மண் இறுகி, காற்றோட்டமும் நீர் ஊடுருவும் திறனும் குறைகிறது. இதனால் வேர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

**3. அமில–காரத் தன்மை (pH)**



பொதுவாக pH 6.5 முதல் 8.4 வரை உள்ள நீர் பெரும்பாலான பயிர்களுக்கு ஏற்றதாகும். pH அதிகமாக இருந்தால் சில ஊட்டச்சத்துக்கள் தாவரங்களுக்கு கிடைக்காமல் போகும்.

**4. குறிப்பிட்ட நச்சுத் தனிமங்கள்**

போரான், குளோரைடு, பைக்கார்பனேட் போன்றவை அதிக அளவில் இருந்தால் சில பயிர்களில் இலை கருகுதல், வளர்ச்சி தடை, மகசூல் இழப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

**தரமற்ற நீரால் ஏற்படும் பாதிப்புகள்**

- மண்ணில் உப்புத்தன்மை அதிகரித்தல்.
- மண் இறுகி நீர் ஊடுருவும் திறன் குறைதல்.
- வேர் வளர்ச்சி பாதிப்பு.
- விதை முளைப்பு குறைதல்.
- ஊட்டச்சத்து குறைபாடுகள்.
- பயிர் வளர்ச்சி மந்தமாதல்.
- மகசூல் மற்றும் தரம் குறைதல்.
- நீண்ட காலத்தில் நிலம் சாகுபடிக்கு தகுதியிழக்கும் நிலை.

**உப்புத் தன்மையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலம்**

**நீரின் தரத்தை அறியும் வழிமுறைகள்**

விவசாயிகள் குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பாசன நீர் மாதிரியை அரசு வேளாண்மைத் துறை, வேளாண் அறிவியல் நிலையம் அல்லது மண் மற்றும் நீர் பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் சரியான பயிர் மற்றும் உர மேலாண்மை முறைகளைத் தேர்வு செய்யலாம்.

## நீரின் தரத்தை சமாளிக்கும் மேலாண்மை முறைகள்

**1. நல்ல தரமான நீருடன் கலந்து பயன்படுத்துதல்**

உப்புத்தன்மை அதிகமுள்ள நீரை, நல்ல தரமான நீருடன் கலந்து பயன்படுத்தினால் உப்புகளின் செறிவு குறையும்.

**2. வடிகால் வசதி அமைத்தல்**

நிலத்தில் வடிகால் வசதி ஏற்படுத்துவதன் மூலம் அதிகப்படியான உப்புகள் மண்ணிலிருந்து வெளியேற உதவும். இது குறிப்பாக கனமான மண்ணில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**3. ஜிப்சம் பயன்பாடு**

சோடியம் அதிகமுள்ள நீர் பயன்படுத்தப்படும் நிலங்களில் ஜிப்சம் இடுவதன் மூலம் சோடியத்தின் பாதிப்பைக் குறைக்கலாம். ஜிப்சம் கால்சியம் வழங்கி மண்ணின் அமைப்பை மேம்படுத்துகிறது.

**4. கரிமப்பொருட்களை அதிகரித்தல்**

தொழு உரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம், பயிர் கழிவுகள் போன்றவற்றை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் அமைப்பு மேம்பட்டு, உப்புகளின் பாதிப்பு குறையும்.

**5. துளி மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்**

துளி நீர்ப்பாசனம் மூலம் குறைந்த அளவு நீரை பயனுள்ள முறையில் வழங்க முடியும். இதனால் உப்புகள் வேர்ப்பகுதியில் அதிகமாக சேராமல் பாதுகாக்க முடியும். நீர்ச் சிக்கனமும் கிடைக்கும்.

**6. பயிர் தேர்வு**

உப்புத்தன்மை அதிகமுள்ள பகுதிகளில் உப்பைத் தாங்கும் பயிர்கள் மற்றும் இரகங்களைத் தேர்வு செய்வது நல்லது. நெல், பருத்தி, பார்லி, சோளம் போன்ற சில பயிர்கள் ஒப்பீட்டளவில் அதிக உப்புத்தன்மையைத் தாங்கும்.

**7. சமச்சீர் உர மேலாண்மை**

மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிட வேண்டும். அதிகப்படியான இரசாயன உரங்களைத் தவிர்த்து, உயிர் உரங்களையும் கரிம உரங்களையும் ஒருங்கிணைத்து பயன் படுத்துவது மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

**8. காலமுறை பாசனம்**

தேவையான நேரத்தில், தேவையான அளவு மட்டும் பாசனம் செய்தால் உப்புகள் அதிகமாக குவிவதைத் தடுக்கலாம். மண் எப்போதும் மிக அதிகமாக காய்ந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**9. மழைநீரை பயன்படுத்துதல்**

மழைநீரை சேமித்து பாசனத்திற்கு பயன்படுத்துவது உப்புத் தன்மையை குறைக்க உதவும். மழைக்குப் பிறகு நிலத்தில் உள்ள உப்புகளும் கீழ்மட்டத்திற்கு கழுவிச் செல்லும்.

**10. ஒருங்கிணைந்த மண்–நீர் மேலாண்மை**

மண் பரிசோதனை, நீர் பரிசோதனை, வடிகால் வசதி, கரிம உரங்கள், துளி நீர்ப்பாசனம், சரியான பயிர் தேர்வு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தினால் நீண்ட காலத்தில் நிலத்தின் வளத்தையும் மகசூலையும் பாதுகாக்க முடியும்.



**துளி நீர்ப்பாசனம் மூலம் தரமற்ற நீரை திறமையாக பயன் படுத்துதல்**

**விவசாயிகளுக்கான முக்கிய ஆலோசனைகள்**

- இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பாசன நீரை பரிசோதனை செய்யுங்கள்.
- மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுங்கள்.
- உப்புத்தன்மை அதிகமுள்ள நீரை தொடர்ந்து பயன் படுத்துவதைத் தவிருங்கள்.
- கரிமப்பொருட்களின் பயன்பாட்டை அதிகரியுங்கள்.
- துளி நீர்ப்பாசனத்தை ஊக்குவியுங்கள்.
- வடிகால் வசதியை ஏற்படுத்துங்கள்.
- உப்பைத் தாங்கும் பயிர் இரகங்களைத் தேர்வு செய்யுங்கள்.
- வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் பல்கலைக் கழகங்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.
- மண் மற்றும் நீர் மாதிரி பரிசோதனை, ஜிப்சம் பயன்பாடு மூலம் சோடியம் பாதிப்பைக் குறைத்தல்.

**முடிவுரை :** காலநிலை மாற்றம், நிலத்தடி நீரின் அளவு குறைதல் மற்றும் நீரின் உப்புத்தன்மை அதிகரித்தல் ஆகியவை இன்றைய வேளாண் மைக்கு பெரும் சவால்களாக உள்ளன. இருப்பினும், நீரின் தரத்தை முன்கூட்டியே பரிசோதித்து, அதற்கேற்ற மேலாண்மை முறை களைப் பின்பற்றினால் மண்ணின் வளத்தையும் பயிர்களின் மகசூலையும் பாதுகாக்க முடியும். 'நீரின் தரத்தை அறிந்து, அறிவியல் முறையில் நிர்வகிப்போம்; நிலையான வேளாண் மையை உருவாக்குவோம்' என்பதே இன்றைய விவசாயிகளின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.





கட்டுரையாளர்கள் : ***விக்னேஷ்.தே, Email : harishvignesh143 @gmail.com, ப.நந்த குமார், Email : arnandhu218@gmail.com உதவிப் பேராசிரியர்கள், மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர். பாளையம், திருச்சி.***